**JUDICIAL MAGISTRATE COURT, No.II CHENGALPATTU**

**CC No. 318 /2016**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*********

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE, No.II CHENGALPATTU. |
| Deposition of witness for | :LW 1 / PW 1 |
| Name | : சாந்தி |
| Father's Name | : ஜானகிராமன் |
| Village | : தாம்பரம் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.12.2022.

**முதல் விசாரணை –**

நான் தற்போது தாம்பரத்தில் வசித்து வருகிறேன். நான் 10ம் வகுப்பு படித்துயிருக்கிறேன். கடந்த 03.03.2010 தேதி சோம சுந்தரம் என்பவரின் வாரிசுகளான கோமதி, ராஜலட்சுமி, லலிதா ஆகிய மூன்று நபரிடமிருந்து காட்டாங்கொளத்தூரிலுள்ள பாலாஜி நகரில் மனை வாங்கினேன், எத்தனை மனைகள் என்றும் எனக்கு தற்போது ஞாபகமில்லை. பிறகு 2011 வருடம் எனது மகன் செந்தில்குமார் திருமண செலவிற்காக மேற்படி மனையை விற்பதற்காக முயன்றபோது மேற்படி நிலம் சம்பந்தமாக ஏற்கானவே 2007 ல் போலியாக கிரைய பத்திரம் பதிவுசெய்யப்பட்டுயிருந்ததை நான் தெரிந்துகொண்டேன். மேற்படி போலி பத்திரமானது எதிரிகள் பெருமாள், பரமசிவம் இருவரும் எதிரி கோதண்டராமன் என்வருக்கு கிரையம் செய்து வைத்துள்ளனர். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் தெரிவித்துயிருந்தேன். அந்த புகாரானது **அசா.ஆ1** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. மேற்படி நான் வாங்கிய மனைக்கு உண்டான கிரைய பத்திரம் ஆவண எண் 1280/2010 நாள் 03.03.2010 தேதியிட்ட ஆவணம் அசா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இம்மனையினை யாரிடமிருந்து எனக்கு கிரையம் செய்து கொடுத்தவர்கள், வாங்கினார்கள் என்ற விவரம் தற்போது எனக்கு ஞாபகமில்லை. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரி மற்றும் வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**JUDICIAL MAGISTRATE COURT, No.II CHENGALPATTU**

**CC No. 318 /2016**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE, No.II CHENGALPATTU. |
| Deposition of witness for | :LW 2 / PW 2 |
| Name | : ஜானகிராமன் |
| Father's Name | : கிருஷ்ணன் |
| Village | : தாம்பரம் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 72 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.12.2022.

**முதல் விசாரணை –**

நான் சென்னை மாநாரட்சியில் இளநிலை பொறியளராக வேலை செய்து ஓய்வுபெற்றுயுள்ளேன். அசா.1 என்னுடைய மனைவி ஆவார். 1971 ஆண்டு எனக்கு திருமணம் நடைபெற்றது. காட்டாங்கொளத்துாரில் சர்வே எண் 3/16, பாலாஜி நகரில் அமைந்துள்ள மனை எண் 31, பரப்பளவு 5285 சதுர அடி என்ற மனையை எனது மனைவி சாந்தி என்பவர் சோமசுந்தரத்தின் வாரிசுகளான கோமதி, ராஜலட்சுமி, லலிதா ஆகியோர் இடமிருந்து 03.03.2010 ல் வாங்கினார். மேற்படி சோமசுந்தரம், நர்சசஸ் எண்டர் பிரைசஸ் நிறுவனத்தில் இருந்து இடத்தினை வாங்கினார். கடந்த 2010ல் எனது மகனுக்கு திருமண செலவிற்காக மேற்படி இடத்தினை விற்பனை செய்ய முடிவு செய்து, மாமல்லன் என்பவருக்கு விற்பனை செய்ய முற்பட்டபோது அவர் வில்லங்க சான்று போட்டு பார்த்தபோது அந்த இடமானது எதிரிகள் பெருமாள் மற்றும் பரமசிவம் ஆகியோர் எதிரி கோதண்டராமன் என்பவருக்கு விற்பனை செய்துயிருப்பது

தெரியவந்தது.   மேற்படி மாமல்லன் என்பவரிடமிருந்து ரூ. 2லட்சம் முன்பணமாக வாங்கியிருந்தேன். அந்த பணத்தை திருப்பி கொடுத்துவிட்டேன். இது சம்பந்தமாக போலிசாரிடம் புகார் என்னுடைய மனைவி தெரிவித்தார்.   போலிசார் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி மற்றும் வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**Sd. xxxxxx**
**Judicial Magistrate No.II**
**Chengalpattu.**
**Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.**